29.10.2024

O.S.No.254/2009

**பி.**வா.சா.3.திரு.ராஜா த.பெ.பொன்ராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதிகள் தரப்பு குறுக்கு** விசாரணை தொடர்ச்சி

1. வாதி தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ-26 ஆவணத்தில் மதுரை வடக்கு வட்டாட்சியர் நடவடிக்கைகள் நாள் -08.02.1999 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் புல எண்.16/3C1, 16/3C2, 16/1A1, 17/9, 17/10, 17/11, 17/12, 17/13, 17/4A, 14/4B எனக் கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் பட்டாதாரர் பெயர் எம்.துரைப்பாண்டி மகன் டி.ராஜேந்திரன், கே.எம்.தங்கவேல் மகன் பாண்டிசெல்வம், பிச்சைராமன் மகன் முத்துபாண்டி என்ற பெயர்களும் பட்டாதாரர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் புல எண்.16/3C1 ஐ பொறுத்த வரை இஎம்ஜி கோபாலகிருஷ்ணன், மகளிர் கல்லூரி தலைவர் இஎம்ஜி சௌந்திரராஜன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.17/1A1Aல் இஎம்ஜி சௌந்திரராஜன் மற்றும் 41 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகத்தில கண்டுள்ள புல எண்.17/1A1A என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-26ல் காணப்படும் சர்வே எண்.17/1A1 ல் உட்பிரிவுதான் எனது பட்டா பாஸ் புத்தகமான பி.வா.சா.ஆ-3 ல் கண்டுள்ள சர்வே எண்.17/1A1A என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ-26ல் வாதிகள் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது அதற்கான புல எண்களும் தனியாக குறிக்கப்பட்டுள்ளது என்றாலும், அதே போல் கோபாலகிருண்ஷகோன் மகளிர் கல்லூரி தலைவராக இருந்து இஎம்ஜி சௌந்திரராஜன் பெயரும் பட்டாதாராக தனிதனி புல எண்ணுக்கு குறிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இஎம்ஜி சௌந்திரராஜன் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டி என்ற முறையில் வாதிகளுக்கு 1983லிலேயே கிரையம் கொடுத்து அதன்படி 1999ம் ஆண்டிலேயே வா.சா.ஆ-26ன் படி உட்பிரிவுசெய்யப்பட்டு புல எண்கள் வாதியின் பெயரில் அவைகள் குறித்து பட்டாக்ள் வழங்கப்பட்டதை இஎம்ஜிசௌந்திராஜன் ஒப்புக்கொண்டாரே தவிர ஆட்சேபணை செய்யவில்லை என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1999ம் ஆண்டே உட்பிரிவு செய்யப்பட்ட புலங்கள் உடைய நிலங்கள் என்பதை மறைத்து எனது தரப்பும், பவர் ஏஜெண்டும்சட்டப்படி செல்லுபடியாகாத கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட் சம்பந்தபடாத வகையில் கிரைய பத்திரங்கள் தயார் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. எங்களது கிரைய பத்திரங்கள் நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிற புல எண்.17/1A1A புலத்தனை குறித்து எந்தவித பாத்தியமோ, அனுபவமோ எங்கள் தரப்பிற்கு ஏற்பட்டதே இல்லை என்றால் சரியல்ல.

3. எங்கள் வழக்குபடியே நாங்கள் எங்கள் வழக்கிலும், சாட்சியத்திலும் ஒப்புக்கொண்டபடியே பார்த்தாலும் வாதி தரப்பில் தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள் உள்ள நிலத்தில் அத்துமீறல்

செய்யவோ, வாதிகள் அனுபவத்திற்கு இடையறு செய்யவோ, எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.158 என்ற புல எண் உடைய நில விஸ்தீரணம் முழுமையும் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சிறுதூர் கிராம நிலங்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ-27 பட்டா மாறுதல் உத்தரவு படி பட்டா எண்.1060 பிச்சைராமன் மகன் கருணாநிதி என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு 07.01.2005ல் ஏற்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ-27 ஆவணம் மதுரை வடக்கு வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவாக காணப்படுகிறது என்றால் சரிதான்.

4. நான் தாவா சொத்தில் குழப்பத்தினை ஏற்படுத்தி வாதிகள்சொத்தினை அபகரித்து ஆக்கிரமிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகள் பெயரில் அவர்கள் கிரையம் வாங்கிய சொத்துககளை பொறுத்து இஎம்ஜி கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட் மற்றும் டிரஸ்டி இஎம்ஜி சௌந்திரராஜன் அரிய வாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து உட்பிரிவுசெய்யப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் இருந்து வரும் சொத்துக்கள் என்ற உண்மை நிலையை மறைத்து உட்பிரிவுசெய்யப்படாத நிலையில் புல எண்கள் இருந்ததாக காட்டி பழைய சர்வே எண்.158/1 என்று வேண்டும் என்றே தவறுதலாக குறிப்பிட்டு வீண் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் உரிய பிரதிபிரயோஜனம் கொடுத்து கிரையம் பெற்றதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. தாவாசொத்து விலை உயர்ந்தது என்பதால் அதை அபகரிப்பதற்கு முறைகேடான ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை எங்கள் தரப்பினர்கள் தான் ஆக்கிரமிக்க முற்பட்டார்கள் என்றாலும், நாங்கள் உண்மைக்கு புறம்பாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றாலும், இந்த வழக்கில் எனக்கு எதிர்வாதம் புரிவதற்கு அருகதை இல்லை என்றாலும் சரியல்ல.